ஶ்ரீ அன்னபூரணி அஷ்டகம்-தமிழில்

தமிழாக்கம்: ஶ்ரீதேவிபிரசாத்

****************

௧)

அழகின் மறுவடிவே ! ஆனந்தத் திருவுருவே !
அபயம் அளிப்பவளே !, வரமருளும் அம்பிகையே !
அகிலத்தின் இன்னலெல்லாம் தீர்க்கின்ற ஈஸ்வரியே !
இமவானின் குலமகளாய் பெருமையினை சேர்த்தவளே!
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..
கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...
உன் கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:
அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (௨)

௨)

தங்கமாக மின்னுகின்ற ஆடையினை அணிந்தவளே !
அங்கமெலாம் பளபளக்கும் ரத்தினங்கள் கொண்வளே !
மின்னுகின்ற முத்துமாலை கழுத்தினிலே தரித்தவளே !
மணக்கும் அகில்வாசம் மேனியிலே கொண்டவளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..
கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...
உன் கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:
அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (௨)

PSDPrasad Music

ஸ்ரீ அன்னபூரணி அஷ்டகம்-தமிழில்

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

****************

3)

சந்திர, சூர்யாக்னி.. ஆற்றலினைக் கொண்டவளே!

சுந்தரமாய் யோக நிலை தனில் நின்று அருள்பவளே !

சீரிய வழிகாட்டி பொருளீட்டித் தருபவளே !

கோரிய வரமுடனே, மங்கலமும் தருபவளே!

அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !

அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..

கருணை என்னும் பிக்ஷயினை எனக்களிப்பாய் அம்மா...

உன் கருணை என்னும் பிக்ஷயினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:

அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (2)

4)

கயிலை மலைக்குகையை...இருப்பிடமாய் கொண்டவளே !

கௌமாரி...உமையவளே ! சங்கரியே ! ஸ்ரீ கௌரி !

ஆகமத் திருப்பொருளே ! ஓம்கார விதைப்பொருளே !

மோட்சத்தின் கதவினையே கருணையினால் திறப்பவளே !

அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !

அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..

கருணை என்னும் பிக்ஷயினை எனக்களிப்பாய் அம்மா...

உன் கருணை என்னும் பிக்ஷயினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:

அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (2)

PSDPrasad Music

ஸ்ரீ அன்னபூரணி அஷ்டகம்-தமிழில்

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

****************

5)

அகம், புறமும் பொங்கிவரும் தெய்வீக குணத்தவளே !

ஜகமிதனைத் தன்னுடனே தாங்குகின்ற தாயவளே !

ஈசனவன் தவப்பயனை அருளாக்கித் தருபவளே !

லீலைபல செய்துஞான விளக்கேற்றி வைப்பவளே !

அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !

அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..

கருணை என்னும் பிகைஷயினை எனக்களிப்பாய் அம்மா...

உன் கருணை என்னும் பிகைஷயினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:

அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (2)

6)

கருணைஅலை போல.கருங் கூந்தல் கொண்டவளே !

அருமைப்பொருள் பாக்கியங்கள் அத்தனையும் தருபவளே !

தாயெங்கள் பூமியும்நீ அன்னபூர்ண ஈஸ்வரியே !

சேயுனது உயிர்கட்கெலாம் உணவளித்துக் காப்பவளே !

அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !

அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..

கருணை என்னும் பிகைஷயினை எனக்களிப்பாய் அம்மா...

உன் கருணை என்னும் பிகைஷயினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:

அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (2)

PSDPrasad Music

ஸ்ரீ அன்னபூரணி அஷ்டகம்-தமிழில்

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

****************

7)

"அ"கரம்முதல் "க்ஷ"கரம் எழுத்துருவாய் ஆனவளே!
சிகரம்நீ முக்குணத்தில்...ஈஸ்வரியே ! தேவியளே !
வேண்டுவரம் தருபவளே ! வாழ்வில்வளம் சேர்ப்பவளே !
மூன்றுசக்தி ஆனவளே ! ஆக்கும்பெண்மை சக்தியளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..
கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...
உன் கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:

அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (2)

PSDPrasad Music

8)

வண்ணமிகு ரத்தினங்கள் மேனியெலாம் கொண்டவளே!
மன்னவனாம் தட்சனுக்கு திருமகளாய் வந்தவளே !
கரத்தினிலே அன்னமேந்தி கனிவுடனே கொடுப்பவளே !
வரமளித்து பக்தர்க்கெலாம் பாக்கியங்கள் தருபவளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..
கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...
உன் கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:

அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (2)

௯)

கோடிகோடி சந்திரனாய் ஒளிரும்முகம் கொண்டவளே!
மின்னுகின்ற குண்டலமும், கைவளையும் பூண்டவளே !
மணிமாலை, புத்தகமும், பாசமுடன் அங்குசமும்
கரங்களிலே தரித்தவளே ! முழுமதியின் முகத்தினளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..
கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...
உன் கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:
அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (௨)

௰)

பயமறுத்துக் காப்பவளே ! கருணைமிகு வடிவினளே !
முக்தியினைத் தருபவளே ! செல்வக்கடல் சிவனுருவே !
தட்சனை அழ வைத்தவளே ! பிழைஉணர வைத்தவளே !
புண்ணியனாய்ச் செய்தவளே ! நலங்களெலாம் கொடுப்பவளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையளே !
அழகுநகர் காசியினை ஆளுகின்ற அன்னையே உன்..
கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...
உன் கருணை என்னும் பிக்ஷையினை எனக்களிப்பாய் அம்மா...

கோரஸ்:
அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (௨)

PSDPrasad Music

ஸ்ரீ அன்னபூரணி அஷ்டகம்-தமிழில்

தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

*****************

(1)

குறைவில்லா பூரணியே ! அன்னபூர்ணி தாயவளே !

பிறைசூடன் பரமசிவன் பக்கமான துணைவியளே !

பார்வதியே ! அருளிடுவாய் ! மெய்ஞ்ஞான பேரறிவை

பாருலக பற்றறுத்து...பண்டிதனாய் ஆக்கிடுவாய் !

இந்தப் பாருலக பற்றறுத்து...பண்டிதனாய் ஆக்கிடுவாய் ! (2)

கோரஸ்:

அன்னபூரணி...அம்மா...அன்னபூரணி... (2)

PSDPrasad Music